சிறைச்சாலைத் திணைக்களம்

சிறைச்சாலைத் திணைக்களத்தில் தாதி உத்தியோகத்தர் II 'ஆ' பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கு விண்ணப்பங்கோரல்

சிறைச்சாலைத் திணைக்களத்தில் தாதி சேவையின் II 'ஆ' பதவியிலுள்ள வெற்றிடங்களுக்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பப்படிவங்கள் யாவும் **சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைத் தலைமையகம், இல.150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09** என்ற முகவரிக்கு 2016.09.26 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **பதிவுத்தபாலில்** அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'தாதி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்தல்'** எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தற்போதுள்ள தாதி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

02. **கல்வித் தகைமைகள்:**

- சிங்களம்/தமிழ்மொழி/கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் உயிரியல் விஞ்ஞான/ கணித/ விவசாய விஞ்ஞான பாடத் துறையில் எல்லாப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்; பழைய பாடத்திட்டத்திலாயின், 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

03. **உடல் தகைமைகள்:**

I) பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் இலங்கையின் எந்தவொரு சிறைச்சாலையிலும் சேவையாற்றுவதற்கு ஏனைய எல்லா விதத்திலும் உடல் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.
II) ஆண்கள் : ஆகக் குறைந்த உயரம் - 05 அடி 04 அங்குலம்.
பெண்கள் : ஆகக் குறைந்த உயரம் - 05 அடி 02 அங்குலம்.
III) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதிய உடல் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.
IV) விண்ணப்பகாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
V) திருமணமாகாத, 18 வயதுக்குக் குறையாத 28 வயதுக்கு மேற்படாத இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்ப்புத் திட்டம்:** 1990.03.09 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கு அமைவாக திறந்த போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

I) ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை, சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.
II) இதற்குரிய கல்வி மற்றும் பிற தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள சிறைச்சாலை சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் திணைக்களத் தலைவர்கள் ஊடாக இதற்கு விண்ணப்பிக்க முடியும்.
III) வெளிவாரி விண்ணப்பகாரர்கள் இல.01 விண்ணப்பப்படிவத்தின்படியும் சிறைச்சாலைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் விண்ணப்பிப்பதாயின், இல.02 விண்ணப்பப்படிவத்தின்படியும் விண்ணப்பிக்க வேண்டும். (சேவையின் தேவையின் அடிப்படையில் ஆர்சேர்ப்புச்செய்யப்படும் பெண் உத்தியோகத்தர்களின் அளவு தீர்மானிக்கப்படும்.)
IV) போட்டிப் பரீட்சை
  - **மொழி** - சிங்களம் / தமிழ்.
  - **உளச்சார்பு** என்ற வகையில் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

05. **சம்பளத் திட்டம்:** 32,525 – 10x445 – 11x660 – 10x730 – 10x750 – 59,035 (அ.நி.சு. 03/2016 இன்பிரகாரம் சீராக்கம்செய்து சம்பளம் வழங்கப்படும்.)

06. **சேவைக்கான நிபந்தனைகள்:** தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் 11 இன் 10–12 வரையான பிரிவுகள் ஏற்புடைத்தாகும்.

07. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். ஆட்சேர்ப்புச்செய்யப்படும் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் மூன்று வருட கால பயிற்சிப் பாடநெறியில் இணைக்கப்படுவர் என்பதுடன், அதில் சித்தி அடைபவர்கள் நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கப்படுவர்.
- அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரம் பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மாற்றமடையலாம்.
- பயிற்சிக்கு அழைக்கப்படும்போது திணைக்களத்துடன் சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எச்.எம்.என்.சி.தனசிங்க
சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்,
சிறைச்சாலைத் தலைமையகம்,
கொழும்பு 09.

தொலைபேசி இல: 011 4677177